දූරකථන) 0112669192 , 0112675011
தொலைபேசி) 0112698507 , 0112694033
Telephone) 0112675449 , 0112675280

ෆැක්ස්) 0112693866
பெக்ஸ்) 0112693869
Fax)0112692913

විද්‍යුත් තැපෑ,)postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி)
e-mail)

වෙබ් අඩවිය) www.health.gov.lk
இணையத்தளம்)
website)

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය)
எனது இல)TA/SA/29/2017
My No.)

ඔබේ අංකය)
உமது இல)
Your No. :)

දිනය)
திகதி)
Date) 2019.05. 24

සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
சுகாதார,போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
Ministry of Health, Nutrition & Indigenous Medicine

பொது சுற்றறிக்கை இலக்கம்: 01 - 33 /2019

பிரதிப்பணிப்பாளர் நாயகம் (இலங்கை தேசிய வைத்தியசாலை),
போதனா வைத்தியசாலைகள் மற்றும் பொது வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,
மத்திய அரசிற்குரிய ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்கள்,
உட்பட சகல நிறுவனத்தலைவர்களுக்கும்,

துணை மருத்துவ சேவையின் பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைய அதி தரத்திற்கு உள்ளீர்ப்பு செய்தல்.

அரச நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இன் பிரகாரம் துணை மருத்துவ சேவையின் பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் ஆட்சேர்ப்புத்திட்ட வரைவு அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீரிக்கப் பட்டுள்ளது.

02. எனவே, ஆட்சேர்ப்பு திட்ட வரைவு அங்கீகரிக்கப்பட்ட தினத்திலிருந்து துணை மருத்துவ சேவையின் பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அலுவலர்கள் உள்வாங்கப்படல் வேண்டும். அதற்கமைய, பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் பதவியில் கடமை புரிகின்ற அலுவலர்கள் புதிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் 14 வது பிரிவிற்கு அமைய, Iம் தரத்திலிருந்து அதி தரத்திற்கு உள்ளீர்ப்பு செய்வதற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் ஊடாக விண்ணப்பிக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

பதவி	சம்பள முறை	திட்டம் அனுமதிக்கப்பட்ட திகதி
பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்	MT - 04	2018.09.25

03. விண்ணப்பிப்பதற்கு தேவையான தகைமைகள் :

சேவையில் Iம் தரத்தில் பத்து (10) வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள மற்றும் Iம் தரத்திற்கு உரித்தான வேதன ஏற்றங்கள் பத்து (10) உழைத்துப்பெற்றுள்ள அலுவலர்கள் அதி தரத்திற்கு உள்வாங்கப்படுவர்.

04. விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தங்களது பரிந்துரையுடன்" பணிப்பாளர் (நிர்வாகம்) 02, சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, "சுவசிறிபாய", 385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

05. இச்சுற்றறிக்கை மூலம் உள்ளடக்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரின் தீர்மானம் இறுதித்தீர்மானம் ஆகும். அத்துடன் இந்த அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையே ஏதாவது வித்தியாசம் அல்லது ஒன்றுக்கொன்று முரண்பாடு ஏற்படுமிடத்து சிங்கள மொழியில் குறிப்பிட்டவையே செல்வாக்குடையதாகும்.

செயலாளர்,

பிரதிகள் :

01. சகல மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு செயலாளர்கள் - தகவலுக்காக
02. சகல மாகாண சுகாதார செயலாளலர்கள் - தகவலுக்காக
03. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் - தகவலுக்காக